# சத்தியமங்கலம் நகராட்சி

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 6–ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நகர் மன்றக் கூடத்தில் நடைபெறவுள்ள சிறப்புக்கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் : 1**

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 81 (A) ன் கீழ் எந்தவொரு நகர் மன்றத்தையும் பிரிவு 78 (1) ல் கூறப்பட்டுள்ள சொத்துவரியினை குறிப்பிட்ட விகிதத்தில் குறிப்பிட்ட நாளிலிருந்து விதித்து ஆணையிட மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தின்படி பொது சொத்துவரி சீராய்வினை 01.04.2022 முதல் அமுல்படுத்த அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1 நாள்.01.042022 ன்படி இந்நகர் மன்ற தீர்மான எண்.34 மற்றும் 35 நாள்.11.04.2022 சத்தியமங்கலம் நகராட்சியில் சொத்துவரி உயர்வு செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க செய்திதாளில் விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபணைகள் பெறப்பட்டு மாவட்ட அரசிதழில் 31.05.2022–ல் வெளியீடு செய்யப்பட்டு, சொத்துவரியானது அரசாணைக்கிணங்க நிர்ணயம் செய்யப்பட்டு சத்தியமங்கலம் நகராட்சியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் தற்பொழுது உயர்த்தப்பட்ட சொத்துவரியானது இதர நகராட்சிகளை காட்டிலும் அதிகபட்சம் உயர்வாக உள்ளதாக ஆட்சேபணைகள் பெறப்பட்டதின் அடிப்படையில் பொது மக்கள் நலன் கருதி இந்நகர் மன்ற தீர்மான எண்.72 நாள்.28.06.2022 ( Rate of Tax) வரி வகிதம் மட்டும் 11% சதவிதத்திலிருந்து 8% சதவீதமாக குறைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தனது கடிதம் எண்.17546/ந.நி.4(1)/2022–1 நாள்.29.12.2022–ல் சொத்துவரியானது தன்னிச்சையாக குறைத்து தீர்மானம் இயற்ற நகர் மன்றத்திற்கு அதிகாரம் இல்லாத நிலையில் சத்தியமங்கலம் நகர் மன்ற தீர்மான எண்.72 நாள்.28.06.2022 ஐ ஏற்க இயலாது எனவும், மேற்கண்ட தீர்மானம் 1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 36 (1) இன் கீழ் ரத்து செய்யலாம் என அரசு கருதுவதாகவும் எனவே, இத்தீர்மானத்தை ஏன் ரத்து செய்ய கூடாது என விளக்கம் கேட்கப்பட்டுள்ளது.

எனவே வரி விகிதம் (Rate of Tax) குறித்து சத்தியமங்கலம் நகராட்சியால் இயற்றப்பட்ட நகர் மன்றத்தீர்மானம் எண்.72 நாள்.28.06.2022 ஐ இரத்து செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

மேலும் அரசாணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு நிர்ணயிக்கப்பட்ட சொத்துவரி உயர்வினை அமுல்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு :

1.நகர்மன்ற தீர்மானம் எண். 72 நாள். 28.06.2022 ஐ ரத்து செய்யலாம்.

2.அரசாணை எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 ன்படி சொத்துவரி சீராய்வினை அமுல்படுத்தலாம்.

தீர்மானம் எண். 274 நாள். 06.01.2023

அலுவலக்குறிப்பு : அங்கீகரிக்கப்பட்டது,

ஆணையாளர் நகர்மன்ற தலைவர்

## 2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் ந.க.எண்: 33552/2022/EA2–SWM–4, நாள்:10.01.2023–ன்படி இந்நகரில் உள்ள 27 வார்டுகளில் உள்ள வீடுகள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் போன்றவற்றில் உருவாகும் கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை பணியின் கீழ் முதல் நிலை சேகரம் செய்யும் பணியினை மேற்கொள்ள, 3 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி தகுந்த சேவை வழங்குநரை தேர்வு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நகராட்சியின் நிரந்தர பணியாளர்களை கொண்டு மேற்கொள்ள இருக்கும் பணிகளான சாக்கடை சுத்தம் செய்தல், தெருக்கள் மற்றும் சாலைகளை சுத்தம் செய்தல், பேருந்து நிலையம், வாரச்சந்தை, தினசரி சந்தை போன்றவற்றில் உருவாகும் கழிவுகளை சேகரித்தல், நுண் உர மையம், வள மீட்பு மையம், உயிரி எரிவாயு கூடம், போன்றவற்றில் மேற்கொள்ளப்பட உள்ள திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான வாகனங்கள் போக மீதமுள்ள வாகனங்களை ஒப்பந்ததாரருக்கு வாடகை அடிப்படையில் வழங்கி பணி மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்நகராட்சியில் உள்ள நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் மற்றும் வாகனங்களை பின்வரும் விவரப்படி ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ளவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

**அதன் விவரம் பின்வருமாறு :**

| பணியின் விவரம் | ஈடுபடுத்த வேண்டிய பணியாளர்களின் எண்ணிக்கை | ஈடுபடுத்த வேண்டிய வாகனங்களின் விவரம் |
|---|---|---|
| நுண் உரக் கூடங்கள், உயிரி எரிவாயு கூடம் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் பணிகள். | – | – |
| வள மீட்பு மையம், | – | – |
| பூங்கா சுத்தம் செய்தல் | – | – |
| பேருந்து நிலையம் | 10 பணியாளர்கள் | LCV – 1 |
| சந்தை | 16 பணியாளர்கள் | HCV – 1 |
| புல் செடிகள் அகற்றும் பணி | 5 பணியாளர்கள் | |
| சாக்கடை சுத்தம் செய்தல் மற்றும் ரோட்டில் உள்ள மண் துள்கள் அகற்றுதல் | 9 பணியாளர்கள் | LCV – 1 |
| பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் | 3 பணியாளர்கள் | – |

| | | |
|---|---|---|
| மலேரிய நோய் தடுப்பு பணிகள், புகை தெளிக்கும் பணிகள் | – | – |
| தெருக்கள் மற்றும் சாலைகள் சுத்தம் செய்தல் | 21 பணியாளர்கள் | LCV – 1 |
| **மொத்தம்** | **64 பணியாளர்கள்** | LCV – 3<br>HCV – 1 |

ஒப்பந்த அடிப்படையில் முதல் நிலை சேகரம் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களால் பின்வரும் விவரப்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**அதன் விபரம் :**

| Quantity of waste Generated (TPD) | Rate Per Tonne (in Rs.) | Estimated Base Cost per day (Rs. In Lakh) | Estimated base cost per year (Rs. In lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs. In lakh) | Estimated total cost per year (Rs. In lakh) |
|---|---|---|---|---|---|
| 10.35 | 5673 | 0.59 | 215.35 | 40.92 | 256.27 |

தினமும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் முதல்நிலை சேகரத்தில் இந்நகராட்சியில் 10.35 டன் திடக்கழிவுகள் உருவாகும் என கணக்கிடப்பட்டுள்ளதன் அடிப்படையில், திடக்கழிவுகள் டன் ஒன்று சேகரித்து ஒப்படைக்க ரூ.5673/– வீதம் வழங்கிடவும், ஆண்டு ஒன்றுக்கு GST உட்பட ஆகும் செலவினம் ரூ.256.27/– இலட்சத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**சேவை வழங்குநர் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விபரம் :**

| வ. எண் | பணியின் விவரம் | எண்ணிக்கை | பணியாளர்கள் எண்ணிக்கை (as per KPI indicators) | வாகனங்கள் எண்ணிக்கை (as per KPI indicators) | ஓட்டுநர்கள் எண்ணிக்கை (as per KPI indicators) |
|---|---|---|---|---|---|
| 1 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து தள்ளு வண்டியில் சேகரிக்கும் பணி | 2078 வீடுகள் | 15 பணியாளர்கள் | 14 Pushcarts | – |
| 2 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து BOV வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி | 4156 வீடுகள் | 23 பணியாளர்கள் | 11 BOV's | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | வீடுகள் தோறும் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும், மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து LCV வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி | 4156 வீடுகள் | 19 பணியாளர்கள் | 6 LCV's | 6 ஓட்டுநர்கள் |
| 4 | சிறு வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து LCV வாகனங்கள் மூலம் சேகரிக்கும் பணி | 1716 சிறு வணிக நிறுவனங்கள் | 8 பணியாளர்கள் | 4 LCV's | 4 ஓட்டுநர்கள் |
| 5 | பெரும் வணிக நிறுவனங்களில் உருவாகும் கழிவுகளை மக்கும் கழிவுகள் எனவும் மக்காத கழிவுகள் எனவும் தரம் பிரித்து HCV வாகனம் மூலம் சேகரிக்கும் பணி | 1114 பெரும் வணிக நிறுவனங்கள் | 4 பணியாளர்கள் | 2 HCV | 2 ஓட்டுநர்கள் |

மேற்கண்டவாறு ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளும் பணிகளுக்கு தேவையான வாகனங்களில் 14 தள்ளுவண்டிகள், 11 BOV வாகனங்கள் மற்றும் ஒரு LCV வாகனம் வாடகை அடிப்படையில் ஒப்பந்ததாரருக்கு இந்நகராட்சியில் இருந்து வழங்கவும், அதற்கான நாள் வாடகை முறையே ஒரு தள்ளுவண்டிக்கு ரூ.10/-, BOV ஒன்றிற்கு ரூ.100/- ஒரு LCV வாகனத்திற்கு ரூ.200/-, ஒரு HCV வாகனத்திற்கு ரூ.400/- என்னும் விலைவிகித அடிப்படையில் ஒப்பந்ததாரரின் மாதாந்திர பட்டியலில் பிடித்தம் செய்து கொள்ளவும், இதர வாகனங்கள் மற்றும் அதற்கான ஓட்டுநர்கள் மற்றும் 3 மேற்பார்வையாளர்களை ஒப்பந்ததாரரே தனது சொந்தப் பொறுப்பில் அமர்த்தி கொள்ளும் வகையிலும், இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி தகுந்த ஒப்பந்ததாரரை தேர்வு செய்து 01.04.2023 ஆம் தேதி முதல் ஒப்பந்ததாரர் மூலம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஆகும் செலவினத்தையும் மேலும் தனியார் நிர்வாக மற்றும் சேவைக் கட்டணம் போன்ற செலவினத்தையும் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சி பொது நிதியில் பற்றாக்குறை ஏற்படும் நேர்வுகளில் அரசால் வழங்கப்படும் 15வது CFC SWM tied grant இல் செலவு செய்து கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண் : 275 நாள். 27.01.2023**

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் தேதி செவ்வாய் கிழமை மலை 4.00 மணிக்கு நகர் மன்றக் கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

பொருள் : 1

சத்தியமங்கலம் நகராட்சி பொறியாளர் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் குடிநீர் டேங்கர் வாகனம் எண்,TN 36AZ 8821 01,01,2023 முதல் 01,01,2024 வரை உள்ள காலாண்டிற்கு வாகன காப்பீடு தொகை ரூ,33270-/- ஐ செலுத்த கோரி வரப்பெற்ற கேட்பு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. குடிநீர் டேங்கர் வாகனம் எண்.TN 36AZ8821 க்கு காப்பீடு தொகை UNITED INDIA INSURANCE COMPANY நிறுவனத்திற்கு தொகை நகராட்சியின் குடிநீர் நிதியில் செலுத்த நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

(கட்டு எண்.766/2021/இ1 )

அலுவலக குறிப்பு :
1)மன்றம் அனுமதிக்கலாம்
2)இந்நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தப்பட்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண் : 276 நாள். 27.01.2023**
**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் : 2

சத்தியமங்கலம் நகராட்சியில் பொறியியல் பிரிவில் TN36 Y 0200 குடிநீர் டேங்கர் லாரி வாங்கபட்டு 15 வருடங்களுக்கு மேலாகி விட்டது, இவ்வாகனம் இயக்க முடியதால் நகராட்சி நீரேற்று நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந,க.எண்.9594/2018/OP3 Dated.25.11.2021 இன்படி நகராட்சியில் உள்ள பழைய வாகனங்களை கழிவு நீக்கம் செய்யப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்கள். எனவே இவ்வலுவலக ந,க,எண்.2540/2022/இ1 நாள்.21.12.2022 இன்படி தானியங்கிப் பொறியாளர், அரசு தானியங்கிப் பணிமனை, ஈரோடு அவர்களுக்கு கடிதம் அனுப்பட்டு துறை ஆய்வு கட்டணம் ரூ.2265/- ஐ செலுத்தப்பட்டு இவ்வாகனத்தை முதிர்ந்த நிலையில் (Normal Condemnation) கழிவு நீக்கம் செய்ய உத்திரவு வழங்கப்பட்டது, மேலும், இவ்வாகனத்தை பொது ஏலம் விட்டு ரூ.177600-/- க்கு குறையாமல் விற்பனை செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டது. எனவே, மேற்கண்ட குடிநீர் டேங்கர் வாகனம் TN36 Y 0200 பொது ஏலம் விட நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண்.2540/2022/இ1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 277 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

பொருள் : 3

சத்தியமங்கலம் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திரங்கள் (Three Star) அறிவிப்பு செய்ய பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் கோரி 01.12.2022 ம் தேதி தினகரன் நாளிதழ் பக்கம் 15 இல் மற்றும் Afternoon நாளிதழ் பக்கம் 3 இல் அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. அன்று முதல் 15 தினங்களுக்குள் எவ்வித கருத்துக்கள் மற்றும் ஆட்சேபணைகள் பொது மக்களிடமிருந்து நகராட்சிக்கு வரப்பெறவில்லை. தூய்மை இந்தியா திட்டம் குப்பை இல்லா நகராட்சியாக மூன்று நட்சத்திரங்கள் அங்கீகாரம் பெற இறுதித்தீர்மானம் வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. விளம்பரம் செய்த வகையில் Afternoon நாளிதழுக்கு ரூ.14,700/– ம் மற்றும் தினகரன் நாளிதழுக்கு ரூ.4,284/– ம் மொத்தம் ரூ. 18,984/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1188/2022/எச்.1)

அலுவலக குறிப்பு :

1.நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது சுகாதார நலன் கருதி நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 278 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

பொருள் : 4

சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு டெங்கு கொசு ஒழிப்பு பணியில் பயன்படுத்தப்பட்டு வரும் VEHICLE MOUNT FOGGING மெஷினை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள 09.01.2023 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று நிறுவனங்கள் விலைப்புள்ளிகள் அளித்துள்ளன.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலை ரூ. |
|---|---|---|
| 1. | THREAD FAST,<br>29, DHANDAPANI STEET,<br>EKATHUTHANKAL, CHENNAI.97 | 31700/- |
| 2. | SHAKTHI INDUSTRIES,<br>46/E, VETRI VINNAYAGAR KOVEL SYREET,<br>HANNUMANHPUTHERI, CHENGALPET | 31,300/- |
| 3. | OM SAKTHI TECH SERVICES,<br>2,WIRELESS STATION CROSS STREET,<br>PORUR, CHENNAI-125 | 26,850/- |

இவற்றில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விலைப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்:2775/2022/எச்.1)

அலுவலகுறிப்பு:-

1. நகர்மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள OM SAKTHI TECH SERVICES, WIRELESS STATION CROSS STREET, PORUR, CHENNAI-125 பொது சுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதியுடன் பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 279 அலுவலக குறிப்பு **அனுமதிக்கப்பட்டது.** நாள். 31.01.2023

**பொருள் : 5**

இந்நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டிற்கு பயன்படுத்தாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களை ஏலம் விடுவதற்கு தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்பு அரசாணை எண்.2275 உள்( போக்குவரத்து துறை) நாள்.10/10/1990 மற்றும் அரசாணை எண்.529 உள் (போக்குவரத்து IV துறை) நாள்.24/01/2021 - விதிமுறைப்படி மோட்டார் வாகனம் பராமரிப்புத்துறை - அரசு தானியங்கிப் பணிமனை, ஈரோடு அவர்களின் பரிந்துறையின் படி தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் மூலம் கீழ்கண்ட பட்டியலில் காணும் வாகனங்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பெயர் | வாகனம் எண் | மதிப்பீடு தொகை.ரூ/- |
|---|---|---|---|
| 1. | டம்பர் பிளேசர் | TN 36 Z 1229 | 71,800/- |
| 2. | டம்பர் பிளேசர் | TN 36 X 0897 | 77,400/- |
| 3. | கழிவு நீர் வண்டி | TN 36 Z 3643 | 67,600/- |
| | | மொத்தம் ரூ. | 2,16,800/- |

மேற்கண்ட வாகனங்களை உரிய அரசு விதிமுறைகளை கடைப்பிடிக்கும் வண்ணமாக உரிய விளம்பரங்கள் செய்து ஏல விற்பனை (Wide Publicity) மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே மாவட்ட அளவில் தினசரி நாளிதழ் விளம்பரம் செய்திடவும் ஏலம் கோரிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/- க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.190/2022/எச்.1

அலுவலக குறிப்பு:-

1) அரசு நிர்ணயித்த தொகையை மன்றம் பார்வையிடலாம்.
2) ஏல நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கிடலாம்.

தீர்மானம் எண் : 280 அலுவலக குறிப்பு **அனுமதிக்கப்பட்டது.** நாள். 31.01.2023

பொருள் : 6

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டு வரும் டிப்பர் லாரி வாகனம் எண்.TN36AQ4510-க்கு தகுதிச் சான்று 16/02/2023 தேதியுடன் முடிவடைவதால் வாகனத்தின் கீழ் காணும் பட்டியலின் விவரப்படி உள்ள பழுதுகளை நீக்கி சரி செய்து தகுதி சான்று பெறுவதற்காகும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,92,000/-க்கு நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | விபரம் |
|---|---|
| 1. | நான்கு புறம் வண்ணம் பூசி தருதல். |
| 2. | ஆயில் மாற்றி செய்திட வேண்டும். |
| 3. | டோர்லாக் பழுதுகள் சரிசெய்து தருதல். |
| 4 | டயர்களை கழற்றி பவுடர் போட்டு தருதல். |
| 5 | டிப்பர் ஜாக்கி ஆயில் சீல் மாற்ற வேண்டும். |
| 6 | ஹாரன் புதியதாக அமைத்து தர வேண்டும் . |
| 7 | கியர்பாக்ஸ் மற்றும் கிளட்ச் சரி செய்து தர வேண்டும். |
| 8 | அனைத்து வீல் பேரிங் கிரீஸ் வைத்து தர வேண்டும். |
| 9 | ஹைட்ராலிக் PTO சர்வீஸ் செய்து தர வேண்டும் |
| 10 | ஓயரிங் சரிபார்த்தல் தருதல். |
| 11 | செல்ப் மோட்டார் டைனமோ சர்வீஸ் செய்து தருதல். |
| 12 | வேகக்கட்டுப்பாடு கருவி சர்வீஸ் செய்தல். |
| 13 | தகுதிச்சான்று பெற ஆகும் செலவினத்திற்கு மேற்கொள்ளும் செலவினங்கள். |
| 14 | ஜாயிண்ட் செக்கப் செய்தல். |
| 15 | ஸ்பிரிங் கட் புஸ் சர்வீஸ் செய்து தர வேண்டும். |

(ந.க.எண்:46/2023/எச்.1)

அலுவலக குறிப்பு:-

1.நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார நலன் கருதி நகர் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 281 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** நாள். 31.01.2023

பொருள் : 7

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.19009/2022/SBM -1 நாள்.25.11.2022 இன்படி தூய்மை இந்தியா திட்டம் -2.O 2022-23 இன்கீழ் இந்நகராட்சிக்கு Biomining மூலம் பழைய குப்பைகள் 6558.40 கன.மீட்டர் அளவிற்கு மறுசூழற்சி செய்ய ரூ.53.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.இத்திட்டத்திற்கு மத்திய அரசு பங்கு 50 சதவீதம், மாநில அரசு பங்கு 33 சதவீதம், நகராட்சி பங்கு 17 சதவீதம் என்ற அலகில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, மேலும், இப்பணிக்கு நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு,12.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | M/s.Orient Builders Private Limited, No.21/ A, Yagappa Nagar,Thanjavur Pin 613007 |
| 2 | M/s.GM CONSTRUCTIONS AND INFRA PRIVATE LIMITED, Near Kamala Subramaniam Wedding Hall, Ground Floor, P 30,Co Operative Colony, 8th Street, Medical College Road,Thanjavur, Tamil Nadu, 613007 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் 18.01.2023 அன்று தொழில்நுட்ப தகுதி ஆராய்ந்ததில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தகுதி வாய்ந்ததாக உள்ளது. (Technically Responsive) எனவே, மேற்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு 19.01.2023 அன்று விலைப்பட்டியல் (Price Bid) திறப்பது குறித்து கடிதம் அனுப்பட்டுள்ளது. 19.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

வேலையின் பெயர் Reclamation of existing dump yard located at Sathy-Athani Main Road Compost Yard by removing the legacy waste of (6558.40 cu.m ) through Bio mining process in sathyamangalam Municipality

Estimate Amount :Rs.53.00 Lakhs

| வ.எண். | ஒப்பந்ததாரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Orient Builders Private Limited, No.21/ A, Yagappa Nagar,Thanjavur. Pin- 613007 | ரூ.4753528 | 1.65 சதவீதம் அதிகம் |
| 2 | M/s.GM CONSTRUCTIONS AND INFRA PRIVATE LIMITED, Near Kamala Subramaniam Wedding Hall, Ground Floor, P30, Co-Operative Colony, 8th Street, Medical College Road, Thanjavur, Tamil Nadu, 613007. | ரூ.4918800 | 5.19 சதவீதம் அதிகம் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் மதிப்பீட்டிற்கு அதிகமாக ஒப்புந்தப்புள்ளி தொகை வழங்கியுள்ளார்கள். இதில் வ.எண்.1 மட்டும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக 1.65 சதவீதம் அதிகம் வழங்கியுள்ளார்கள். எனவே, 19.01.2023 அன்று M/s.Orient Builders Private Limited No.21/ A, Yagappa Nagar, Thanjavur. Pin 613007 ஒப்பந்ததாருருக்கு விலை குறைத்து தரக்கோரி கடிதம் அனுப்பபட்டுள்ளது. இக்கடிதம் பெறப்பட்ட ஒப்பந்ததாரர் அவர்கள் 1.65 சதவீதத்தில் இருந்து மதிப்பீட்டு தொகைக்கு பணிகள் செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.Orient Builders Private Limited, No.21/A, Yagappa Nagar,Thanjavur. Pin- 613007 | ரூ.4676139 | மதிப்பீட்டு தொகை |

எனவே, குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s.Orient Builders Private Limited, No.21/ A, Yagappa Nagar,Thanjavur. Pin-613007 அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (கட்டு எண்.59/2019/இ1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 282 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

**பொருள் : 8**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே3 நாள்.04.12.2018 இன்படி சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 1,2,17 முதல் வார்டுகள் 22 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி ஒப்படைப்பு செய்து 50 ஒப்பந்த பணியாளர்கள் தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற அடிப்படையில் 01.04.2021 முதல் 31.01.2023 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடையும் நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட கருத்துரு நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள 50 ஒப்பந்த பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.02.2023 முதல் 31.03.2023 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.02.2023 முதல் 31.03.2023 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.15,74,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந. க. எண். 137/2020/எச்.1)

**அலுவலகக்குறிப்பு :**

1.பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2. இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் : 283 அலுவலக குறிப்புஅனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

**பொருள் : 9**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை -28 அவர்களின் கடிதம் எண். 28369/ஜே 3 நாள்.04.12.2018 சத்தியமங்கலம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வார்டு எண். 11,12,23 முதல் வார்டுகள் 27 வரையுள்ள பகுதிகளில் 01.04.2020 முதல் 31.03.2021 வரை (Outsourcing) தனியார் வசம் பணி நீட்டிப்பு செய்து 55 ஒப்பந்த பணியாளர்கள் மூலம் துாய்மைப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர். தற்போது வி.பி.என்.பில்டர்ஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு தொடர்ந்து ஒரு மாத காலம் என்ற முறையில் 01.04.2021 முதல் 31.01.2023 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதிக்காலம் முடிவடைந்த நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட கருத்துரு நகராட்சிகள் நிர்வாக இயக்குநரகம் அனுப்பப்பட்ட 01.04.2023 அன்று முதல் புதிய ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. அது வரையில் மேற்காணும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள 55 ஒப்பந்த பணியாளர்களின் வெளிமுகமை நிறுவனத்தின் ஒப்பந்தக்காலத்தினை 01.02.2023 முதல் 31.03.2023 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு பொது சுகாதார பணியின் அவசியம் கருதி தனியார் நிறுவனமான வி.பி.என். பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.02.2023 முதல் 31.03.2023 வரையிலான இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை

நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும். அதற்கான உத்தேச செலவினம் ரூ.17,30,000/- க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந. க. எண். 1305/2019/எச். 1)

**அலுவலகக்குறிப்பு : -**

1.பொது சுகாதாரப்பணியின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் : 284 அலுவலக குறிப்புஅனுமதிக்கப்பட்டது.** நாள். 31.01.2023

**பொருள் : 10**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பராமரிப்பிலுள்ள பள்ளியில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பு செய்திட தனியார் ஒப்பந்தம் மூலம் பணியாளர்களை நியமிக்க அரசாணை எண். G.O.(MS) No. 166 நாள். 23.11.2016 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை இன்படி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி சத்தியமங்கலம் நகராட்சியில் கீழ்க்காணும் விபரப்படி பள்ளிகள் உள்ளன.

| வ.எண் | பள்ளி விபரம் | பணியாளர் |
|---|---|---|
| 1 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ரங்கசமுத்திரம் | 2 |
| 2 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி, ரங்கசமுத்திரம் | 3 |
| 3 | நகராட்சி ஆரம்ப பள்ளி, ஆர். எம்.பி. நகர் | 2 |
| 4 | நகராட்சி நடுநிலைப் பள்ளி, சத்தியமங்கலம் | 3 |
| 5 | நகராட்சி துவக்கப்பள்ளி, கொளத்தூர் | 2 |
| 6 | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி | 4 |
| | **மொத்தம்** | **16** |

இவ்வலுவலக ந.க.எண். 650/2019/எச்.1 நாள். 30.06.2019 இன்படி 01.07.2019 முதல் 30.06.2020 வரையிலான காலத்திற்கு வெளிக்கொணர்வு முறையில் பள்ளிக்கழிப்பறைகள் துாய்மையாக பராமரித்தல் பணியினை மேற்கொள்ள உத்திரவிடப்பட்டு தற்பொழுது 30.06.2020 உடன் மேற்படி பணியின் காலம் நிறைவு பெறுவதால், மீண்டும் 01.07.2020 முதல் 30.06.2021 வரையில் ஓராண்டு காலத்திற்கு மேற்காணும் 6 பள்ளிகளுக்கு 16 பணியாளர்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு தற்காலிகமான முறையில் பணி பார்க்கப்பட்டு பழைய ஊதிய விகிதத்தில் ஊதியம் வழங்கப்பட்டு வந்தனர்.

மேற்படி16 ஒப்பந்த பணியாளர்களுக்கான ஒப்பந்தக்காலத்தினை 01.05.2022 முதல் 31.01.2023 வரை பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளப்பட்டது. எனவே மேலும் 01.02.2023 முதல் 31.03.2023 வரை இரண்டு மாத காலத்திற்கு ஏற்கனவே துாய்மை பணிகளை மேற்கொண்டு வந்த V.B.N. பில்டர்ஸ், திருப்பூர் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தில் 01.02.2023 முதல் 31.03.2023 வரையிலான ஒரு மாத காலத்திற்கு ஒப்பந்தக்காலத்தினை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5,04,000/-க்கு நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந. க. எண்.541/2020/எச். 1)

அலுவலகக்குறிப்பு :

1. பள்ளி மாணவ மாணவியரின் நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தினை பள்ளிக்கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் : 285 அலுவலக குறிப்புஅனுமதிக்கப்பட்டது.** நாள். 31.01.2023

**பொருள் : 11**

சத்தியமங்கலம் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனம் எண்.TN36AQ4510 வாகனத்திற்கு காப்பீடு காலம் 24.01.2023 உடன் முடிவடைகின்றது. எனவே மீண்டும் 25.01.2023 முதல் 24.01.2024 முடிய ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.33,823/– க்கு நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 113/2023/எச்.1)

**அலுவலகக்குறிப்பு :**

1.நகர்மன்றம் அனுமதிக்கலாம்.

2.இச்செலவினத்தினை நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண் : 286 அலுவலக குறிப்புஅனுமதிக்கப்பட்டது.** **நாள். 31.01.2023**

**பொருள் : 12**

சத்தியமங்கலம் நகராட்சியில் பவானி ஆற்று நீரை ஆதாரமாக கொண்டு இரண்டு தலைமை நீரேற்று நிலையங்கள் உள்ளன. ஒன்று ரங்கசமுத்திரம் 1966 ஆம் ஆண்டு மற்றொன்று கோம்புபள்ளம் 1996 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு நகராட்சி பொதுமக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி 37,816 ஆகும். தற்பொழுது எதிர்வரும் ஆண்டுகளில் சுமார் 40000 மக்கள் தொகை அதிகரிக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 13000 வீட்டு வரி விதிப்புகள், 6350 குடிநீர் இணைப்புகள் மற்றும் இதர வரவின வருவாய் இனங்கள் வசூல் செய்யப்பட்டு வருகின்றன. தற்பொழுது நகராட்சி அலுவலகத்தில் போதிய கள பணியாளர்கள் இல்லாமல் பொறியாளர் பிரிவில் கட்டுமான பணிகள், குடிநீர் விநியோகம் மற்றும் இதர பணிகள் விரைவாக செய்ய இயலாத நிலையில் உள்ளது. மேலும், மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்களான சாலை, மழை நீர் வடிகால், கட்டிடங்கள் போன்ற பணிகள் கண்காணிக்க பணி ஆய்வர் இல்லாமல் அன்றாட கட்டுமான பணிகளை கவனிக்க முடியாத நிலையில் உள்ளது. கீழ்கண்ட இனங்களில் பணி மற்றும் பணியாளர்கள் குறித்த விபரங்கள் வருமாறு.

<u>தலைமை நீரேற்று நிலையம் :</u>

இந்நகராட்சிக்கு பவானி ஆற்றிலிருந்து தினசரி 3.63 MLD குடிநீர் எடுக்கப்பட்டு முறையே சுத்திகரிக்கப்பட்டு 39.892 கி.மீ அளவிற்கு பகிர்மான குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் இரண்டு தலைமை நீரேற்று நிலையத்திற்கும் சேர்த்து ஒரு மின் கம்பியாளர் மட்டுமே உள்ளார். இரண்டு நீரேற்று நிலையமும் காலை 4.30 மணி முதல் இரவு 9.30 வரை இயக்கப்பட்டு வருகிறது. இதன் மத்தியில் மின் டிரான்ஸ்பார்மரில் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுகிறது. மின் கம்பியாளர் அங்கும் இங்கும் சென்று மின்சார பணிகள் சீர் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சி பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாதால் வெளி ஆட்கள் மூலம் பம்புகள் இயக்க மின் பணியாளர்கள் இரண்டு நபர்கள் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

**குழாய் திறப்பாளர்கள்:**

இந்நகராட்சியில் 39.892 கி.மீ அளவிற்கு பகிர்மான குழாய்கள் மூலம் உரிய கேட்வால்வுகள் வழியாக வீதிகளுக்கும், தனியார் குடிநீர் இணைப்புகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது குழாய் 64, தனியார் குடிநீர் குழாய் இணைப்புகள் - 6350 எண்ணிக்கைகள் உள்ளன. ஆனால் குழாய் திறக்கும் பணியாளர்கள் 4 பேர் உள்ளனர். மேலும் ஜனவரி-23 ல் மற்றும் ஜுன்-23 ல் இரண்டு பணியாளர்கள் ஓய்வு பெற உள்ளனர். ஒரு நபர் மட்டும் 5 (ஐந்து ) வார்டுகளுக்கு காலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை குடிநீர் விநியோக பணி செய்யப்பட்டு வருகிறது. பணிபுரியும் பணியாளர்கள் ஓய்வின்றி பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் பல இடத்தில் குடிநீர் விநியோக பிரச்சனைகள் ஏற்பட்டு வருகிறது. இதனை சமாளிக்கும் பொருட்டு கூடுதலாக 2 (இரண்டு) குழாய் திறக்கும் பணிக்கு வெளி ஆட்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

**மீட்டர் ரீடிங் கணிணியில் பதிவு செய்தல்:**

இந்நகராட்சியில் தற்பொழுது 6221 தனியார் குடிநீர் இணைப்புகள் உள்ளன. குடிநீர் இணைப்புகள் மூலம் நகராட்சிக்கு குடிநீர் கட்டண கேட்பு தொகை ரூ.87.50 இலட்சம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இணைப்பு நேரடியாக சென்று குடிநீர் மீட்டரில் அளவீடு செய்து நகராட்சி நிர்வாக ஆணையரக மென்பொருளில் CFC இல் 4 (நான்கு) காலாண்டிற்கு பதியப்பட்டு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும். நடைமுறையில் ஒரு காலாண்டிற்கு 6350 இணைப்புகள், மொத்தம் 4 காலாண்டிற்கு 25000 பதிவுகள் கணிணியில் ஏற்றம் செய்து குடிநீர் கட்டணம் வசூலிக்க போதிய கால அவகாசம் இல்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதனை சமாளிக்கும் பொருட்டு நகராட்சியின் பொறியியல் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லை. மேலும் மீட்டர் ரீடர் பணியாளர் ஒருவர் ஓய்வு பெற உள்ளார் அதனை கருத்தில் கொண்டு கணிணியில் மீட்டர் ரீடிங் பதிவு செய்யும் பணிக்கு ஒரு நபர் வெளி ஆட்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

**தொழில் நுட்ப உதவியாளர்கள் :**

இந்நகராட்சி 2016-17 முதல் 2019-2020 ஆம் ஆண்டு வரை மாநில மற்றும் மத்திய அரசால் சாலை, மழைநீர் வடிகால், கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு பணிகளுக்கு அதிகளவில் திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு நடைபெற்று கொண்டு வருகின்றன. ஒவ்வொரு திட்டத்திற்கும் தலைமை பொறியாளர் சென்னை அவர்களை நேரில் சென்று சுமார் 7 முதல் 10 நாட்கள் அங்கேயே தங்கியிருந்து தொழில் நுட்ப அங்கீகாரம், பணி முன்னேற்றம், பணி முடிவுறிக்கை போன்றவைகள் ஒப்புதல் பெறுவது அவசியம் ஆகும். ஆனால், இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பொதுப்பணி மேற்பார்வையாளர் பணியிடம் மட்டும் உள்ளது. தினசரி கள ஆய்வு மேற்கொள்ளப்படவும், குடிநீர் பிரச்சனைகள் சமாளிக்கவும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு உரிய அறிக்கைகள் அனுப்பவும் மற்றும் அத்தியாவசிய பணிகளும் பார்க்கப்பட வேண்டும். ஒரு பணியாளர் கொண்டு இத்தனை பணிகள் பார்ப்பது மிகவும் கடினமாக உள்ளது. கூடுதலாக பொறியாளர்கள் இருந்தால் அனைத்து பணிகளும் பிரித்து விரைவாக செயல்படுத்த முடியும். பொதுமக்களுக்கும் அவ்வபோது ஏற்படும் குடிநீர் விநியோகம், வடிகால், சாலை மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு குறித்த பிரச்சனைகள் தீர்க்க இவ்வாண்டு ஓய்வுபெறும் மின்கம்ப உதவியாளர் பணிக்கு மின்கம்பி உதவியாளர் 1 (ஒன்று) மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் 1 (ஒன்று) நபர்கள் வெளி ஆட்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

**மின் பணியாளர்:**

சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட ரங்கசமுத்திரம் மற்றும் கோம்புபள்ளம் தலைமை நீரேற்று நிலையத்தில ஆற்று நீர் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழியே 20 கு.தி., 50 கு.தி.,35 கு.தி, திறன் கொண்ட மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு வருகிறது. ஆற்றுபடுகையிலிருந்து சுமார் காலை 4.30 மணி முதல் இரவு 10.00 மணி வரை மின்

மோட்டார்கள் இடைவிடாமல் இயக்கப்பட்டு வருகிறது.இப்பணியினை மின் பணியாளர் மட்டுமே செயல்படுத்த முடியும்.இந்நகராட்சிக்கு மின்பணியாளர்கள் பணியிடம் மூன்று ஒதுக்கீடு ஆகும்.

ஆனால் இப்பணிக்கு மின் பணியாளர் ஒருவர் மட்டுமே இருந்துள்ளார்கள். அவரும் கோபிச்செட்டிபாளையம் நகராட்சிக்கு மாற்றம் செய்யப்பட்டார். எனவே, இருக்கும் பணியாளர் வைத்து கொண்டு பணியை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணியாளர்களுக்கு போதிய ஓய்வின்றி பணிகள் பார்த்து கொண்டு வருகிறார்கள். இதனால் பணியாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். எனவே, மின் பணியாளர் இரண்டு வெளி ஆட்கள் மூலம் தேர்வு செய்ய வேண்டியுள்ளது.

சுருக்க பட்டியல்

| வ. எண் | பணியிடம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடங்கள் | தற்போதுள்ள பணியாளர் விபரம் | 2023-ம் ஆண்டில் ஓய்வு பெறுபவர்கள் | தேவைப்படும் பணியாளர் (வெளி ஆட்கள்) |
|---|---|---|---|---|---|
| 1 | குழாய் திறப்பாளர் | 4 | 4 | 2 | 2 நபர்கள் |
| 2 | த.கு.நீ.நி.உதவியாளர் | 2 | 2 | 1 | 1 நபர்கள் |
| 3 | தொழில்நுட்ப உதவியாளர் | - | 0 | 0 | 1 நபர் |
| 4 | மின் பணியாளர்(குடிநீர்) | 3 | 0 | 0 | 3 நபர் |
| 5 | மின்கம்பி உதவியாளர் | 1 | 1 | 1 | 1 |
| 6 | பிட்டர் | 2 | 1 | 1 | 1 |
| | மொத்தம் | 12 | 8 | 4 | **9 நபர்கள்** |

எனவே, மேற்கண்ட பணியாளர்கள் பற்றாகுறையால் தற்பொழுது உள்ள பணியாளர்களுக்கு தொடர்ந்து இரவும் பகலும் பணி செய்ய அதிகளவில் மன உளைச்சல் ஏற்படுகிறது. இவ்வலுவலக மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பபட்டதில் இன்னும் உரிய உத்தரவுகள் பெறப்படாத காரணத்தால், குழாய் திறப்பாளர்கள்- 2 , தலைமை குடிநீரேற்று நிலைய உதவியாளர்-1, மின் கம்பி உதவியாளர் -1 இந்த ஆண்டு ஓய்வு பெறுவதை ஒட்டியும், அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் மேம்பாடு பணியில் புதிததாக 4 மேல்நிலைத்தொட்டி கட்டப்பட உள்ளதாலும், போதிய குழாய் திறப்பாளர்கள் இல்லாததால் குடிநீர் விநியோக பணி பாதிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியிடம் | தேவைப்படும் பணியாளர் (வெளி ஆட்கள்) |
|---|---|---|
| 1 | குழாய் திறப்பாளர் மற்றும் உதவியாளர்கள் | 5 நபர்கள் |
| 2 | மின் பணியாளர் | 2 நபர் |

| | | |
|---|---|---|
| 3 | பிட்டர் | 1 நபர் |
| 4 | கணிணி இயக்குநர் | 1 நபர் |
| | | **9 நபர்கள்** |

எனவே, தற்காலிமாக கீழ்கண்ட பணியிடம் வெளி ஆட்கள் (Out Sourcing) மூலம் மூன்று மாதத்திற்கு பணியமர்த்த **ரூ.4.98 இலட்சத்திற்கு** மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினம் நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். /2023/இ1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 287 அலுவலக குறிப்புஅனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

**பொருள் : 13**

சத்தியமங்கலம் நகராட்சி அலுவலக பின்புறம் காம்பவுண்ட் சுவர் புதியதாக கட்டவும் மற்றும் அலுவலகத்திற்கு முன்புறம் உள்ள கழிவு நீர் கால்வாய் மராமத்து பணிகள் மற்றும் இதர மராமத்து பணிகள் அவசர அவசியம் கருதி பணிகள் மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 548/2022/இ1)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 288 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

**பொருள் : 14**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14 வெங்கடாசலம் பெரிய வீதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 548/2022/இ1)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 289 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

பொருள் : 15

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 20 பிள்ளையார் கோயில் வீதி அருகில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 548/2022/இ1)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 290 **அனுமதிக்கப்பட்டது.** நாள். 31.01.2023

பொருள் : 16

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 25462/2022/SBM .2 நாள்.27.09.022 ன்படி SBM 2.0 The Swachh Amrit Mahotsav திட்டத்தின் கீழ் 22.09.022 மற்றும் 30.09.2022 ஆகிய இரண்டு நாட்கள் புது டெல்லியில் நடைபெறும் Work Shop பயிற்சியில் திரு.எம்.மலைச்சாமி, துப்புரவு ஆய்வாளர் அவர்களை கலந்து கொள்ள கோரி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சியில் கலந்து கொண்டதற்கான பயணப்படி ரூ.21922/- வழங்க கேட்டுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 3326/2010/இ1)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 291 **அனுமதிக்கப்பட்டது.** நாள். 31.01.2023

பொருள் : 17

சென்னை மாநில நலவாழ்வு மையம், தேசிய நலவாழ்வு இயக்கம், இயக்குநர் மற்றும் முதன்மை செயலாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண், 1869/NUHM/SHS/2015 Dated:13.10.2021 இன்படி சத்தியமங்கலம் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட மைசூர் டிரங்க் ரோடில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் உள்ள பழைய கட்டிடத்தினை இடித்து விட்டு புதியதாக கட்டிடம் கட்ட திட்ட நிதி ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் பழைய கட்டிடத்தினை இடிக்க ஈரோடு துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் அவர்களின் கடிதத்தின் வாயிலாக பொதுப்பணி துறை கட்டட (க)(ப) உபகோட்டம், சத்தியமங்கலம் அவர்களின் கடித ந.க.எண்.க.எண்.கோ.18/2022-23/ உசெபொ. சத்தி. நாள்.12.01.2023 இன்படி மேற்கண்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள பழைய கட்டிடத்தினை இடிக்க

தடையின்மை சான்று வழங்கப்பட்டது, எனவே, நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள பழைய கட்டிடத்தினை இடிக்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

(கட்டு எண். 452/2022/இ1)

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண் : 292 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

**பொருள் : 18**

சத்தியமங்கலம் நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் Bio Mining பணிகள் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் Miya Wakie (அடர்வன காடு) அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு தேவையான தண்ணீர் வசதிகள் செய்து கொடுக்க உத்தேச செலவினம் ரூ.0.75 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 548/2022/இ1)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 293 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

**பொருள் : 19**

சத்தியமங்கலம் கிராமம் வார்டு D, பிளாக் – 4, நகரளவு எண்கள். 1/5, 1/7, 5/1, 5/7 மற்றும் 5/8 க. ச. எண்கள். 385/2, 385/3 மற்றும் 386/2–ல் 3.84 ஏக்கர் (அ) 1554.80 m2 பரப்பளவு உள்ள இடத்தை விட்டு மனைகள் அமைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக Roc.No. ERD/QUJU858T/022/TCP நாள்.27.10.22 அன்று மனைப்பிரிவு நிபந்தனைகளின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பொறியியல் பிரிவின் சான்று 19.01.2023 அன்று பெறப்பட்டுள்ளது. திரு. எம். சண்முகம் மற்றும் பழனிச்சாமி, 11, கவிதா நகர், கரட்டடிபாளையம், லக்கம்பட்டி, கோபி செட்டிபாளையம், ஈரோடு – 638 453 ஆகவே அவருக்கு இறுதி ஒப்புதல் வழங்க நகர்மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 2502/2022/எப்.1)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 294 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

பொருள் : 20

இந்நகர்மன்ற தீர்மான எண் 251/31.12.2022 ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து 25.01.2023 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

1) வேலையின் பெயர்: Supply & Installation of I Tank Smart Water Management System which includes water Level Monitoring ,Level Display with Alarm System, WEB & APP Monitoring (Installation Charges & Commissioning (Inlcuded) in sathyamangalam Municipality - 7 Units

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|
| 1 | M/s .Real Tech system,Erode | ரூ.410200/- |
| 2. | M/s .Aqua stream system ,Chennai | ரூ.413112/- |

மேற்கண்ட பணிக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய M/s.Real Tech system, Erode அவர்களின் ஒப்பந்தபுள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(கட்டு எண் .548/2022/இ1)

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய M/s .Real Tech system,Erode ஒப்பந்தபுள்ளி ஏற்று கொள்ளலாம்

**தீர்மானம் எண் : 295 அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

பொருள் : 21

1.C.தியாகராஜன், 2.K.S.சென்னியப்பன், 3.S.P. சுப்ரமணியம், 4.S.P.சாமிநாதன், மைசூர் டிரங் ரோடு, சத்தியமங்கலம் என்பவர் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சத்தியமங்கலம் நகராட்சி, வரதம்பாளையம் கிராமம், வார்டு–A, பிளாக் – 23, ந.க.எண். 5/1D ல் 0.77 ஏக்கர் பரப்பிற்கு மனைப்பிரிவு அனுமதி கோரி விண்ணப்பித்ததில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு அவர்களின் கடிதம் ந. க. எண். 150/2020/ஈ மா 2 நாள். 29.12.2022 அன்று தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியுள்ளார். மேலும் இறுதி ஒப்புதல் வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1109/2019/எப்.1)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 296 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

பொருள் : 22

1.C.தியாகராஜன், 2.K.S.சென்னியப்பன், 3.S.P.சுப்ரமணியம், 4.S.P.சாமிநாதன், மைசூர் டிரங் ரோடு ,சத்தியமங்கலம் என்பவர் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சத்தியமங்கலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வரதம்பாளையம் கிராமம், வார்டு – A, பிளாக் – 23, ந.க.எண். 5/1 B ல் 0.46 ஏக்கர் (அ) 1862.00 சதுர மீட்டர் பரப்பளவில் உள்ள தனது மனையிடத்தை மனைப்பிரிவுகளாக கோரி விண்ணப்பித்ததில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) ஈரோடு அவர்களின் கடிதம் ந. க. எண். 151/2020/ஈ மா 2 நாள். 29.12.2022 அன்று தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியுள்ளார். மேலும், நகராட்சி பொறியாளரின் பணி நிறைவு சான்றும் பெறப்பட்டுள்ளது. மேலும் இறுதி ஒப்புதல் வழங்க நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1147/2019/எப்.1)

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் : 297 அனுமதிக்கப்பட்டது. நாள். 31.01.2023**

நாள் : 27.01.2023

நகர்மன்ற தலைவர்
சத்தியமங்கலம் நகராட்சி.